**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 145** **நாள்: 18.09.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

-----

பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (18.09.2018) ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள அம்மா மாளிகையில் நடைபெற்றது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை குறித்த சென்னை வானிலை ஆய்வு மையத்தின் அறிவிப்புகள் இல்லாத நிலையிலும், பெருநகர சென்னை மாநகராட்சியால் பருவமழை காலத்தில் மேற்கொள்ளவேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து இவ்வாய்வுக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

ஆய்வுக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் அதிக மழைநீர் தேங்கும் இடங்களைக் கண்டறிந்து தேவையான இடங்களில் அதிக குதிரைத்திறன் கொண்ட பம்பு செட்டுகள் இருப்பு வைத்திடவும், மழைநீர் வடிகால்வாய் பணிகள் நடைபெற்று வரும் இடங்களில், விரைந்து பணிகள் முடிக்கப்பட்டு, தண்ணீர் தடையில்லாமல் செல்கின்ற வகையில் இணைப்புகள் ஏற்படுத்திடவும், மழைநீர் வடிகால்வாய் பணிகள் நடைபெற்று வரும் இடங்களை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஆய்வு செய்து, அறிக்கை சமர்ப்பித்திடவும், மழைக்காலங்களில் பல்வேறு விதமான தொற்றுநோய்களால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், அவைகளிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் பொருட்டும், பாதுகாப்பு நடவடிக்கைகளில் சுகாதாரத்துறை அதிகாரிகள் கூடுதல் கவனம் செலுத்திடவும், சாலைகளில் விழும் மரங்களை போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் உடனுக்குடன் அகற்ற வாகனங்கள் மற்றும் மரஅறுவை இயந்திரங்களை தயார் நிலையில் வைத்திருக்கவும், சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் உள்ள நீரேற்று நிலையங்களும் இயங்கும் வகையில் தயார் நிலையில் இருத்தல் வேண்டும். வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கு உணவு வழங்க

தேவையான பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும் எனவும் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 மண்டலங்களில் மழைநீர் வடிகால்வாய் இணைப்பு இல்லாமல் இருந்த 469 இடங்கள் கண்டறியப்பட்டு, அவை மழைநீர் வடிகால்வாய்களுடன் இணைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 171 மரஅறுவை இயந்திரங்கள், 63 மரக்கிளைகள் அகற்றும் இயந்திரங்கள், 44 மின் மோட்டார் பம்புகள், 414 டீசல் மற்றும் பெட்ரோல் உயர் அழுத்த பம்புகள், 130 ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் இருப்பதை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டும். அனைத்துத் துறை அலுவலர்களும் பருவமழை காலத்தில் இணைந்து பணியாற்றி வெள்ளத்தடுப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி 1894 கி.மீ. நீளத்திற்கு 7351 எண்ணிக்கையில் மழைநீர் வடிகால்களை பராமரித்து வருகிறது. இந்த மழைநீர் வடிகால்களில் சுமார் ரூ.21.00 கோடி செலவினத்தில் தூர்வாரும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. சுமார் ரூ.15.91 கோடி செலவினத்தில் சிறு பராமரிப்பு பணிகளான புது மனித நுழைவு வாயில்கள் அமைப்பது, உடைந்த பகுதிகளை புதுப்பிப்பது போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியினால் பராமரிக்கப்படும் 30 பெரிய கால்வாய்கள் நவீன இயந்திரங்களைக் கொண்டு தூர்வாரும் பணிகளும், ஆகாயத்தாமரைகள் அகற்றும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரூ.19.65 கோடி மதிப்பிலான மூன்று ரொபோடிக் மண்தோண்டும் கருவிகள் மூலம் சிறிய கால்வாய்கள் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரையில் 35,000 மெட்ரிக் டன் வண்டலகள் மற்றும் ஆகாயத்தாமரைகள் அகற்றப்பட்டுள்ளன. ரூ.4.10 கோடி மதிப்பிலான ஆம்பிபியன் வாகனம் மூலம் 10,000 மெட்ரிக் டன் வண்டல்கள் அகற்றப்பட்டுள்ளது. மேலும், தேவையற்ற முறையில் சமூக வலைதளங்களில் பொதுமக்களுக்கு பீதி மற்றும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் புயல், வெள்ளம் போன்ற நிகழ்வுகள் குறித்து வதந்தி பரப்புபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பருவமழை குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தொடர்புடைய அலுவலகங்கள் வாயிலாக முறையான தகவல்கள் அவ்வப்பொழுது பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படும். எனவே பொதுமக்களை தேவையின்றி அச்சப்படுத்த வேண்டாம்

என எச்சரிக்கப்படுவதாக பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.சண்முக சுந்தரம், இ.ஆ.ப., சென்னை காவல்துறை கூடுதல் ஆணையர் (வடக்கு) திரு.ஆர்.தினகரன், இ.கா.ப., துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி.ஆர்.லலிதா, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர், தெற்கு வட்டார துணை ஆணையாளர் உட்பட சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுவாரியம், மின்சார வாரியம், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, பேரிடர் மேலாண்மை, கப்பற்படை, கடலோர காவல் படை, விமானப்படை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், காவல்துறை, இந்திய வானிலை ஆய்வு மையம், வானொலி, இந்து அறநிலையத் துறை, வேளாண்மைத்துறை, தீயணைப்புத்துறை, போக்குவரத்துத்துறை, ஆவின், குடிசை மாற்று வாரியம், மீன்வளத்துறை, வனத்துறை, சுகாதாரத்துறை, தென்னக இரயில்வே துறை, பி.எஸ்.என்.எல், மெட்ரோ இரயில்வே துறை, ரெட் கிராஸ், புளூ கிராஸ் மற்றும் முன்னாள் இராணுவ வீரர்கள் நலத்துறை போன்ற துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**